

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 25.01.2024 | 04. “உம் சித்தம் ஒன்றே” என தவித்த இயேசுவின் ஜெபம்! |
|---|---|



கோதுமை மணி நிலத்தில் விழுந்து சாகும் நேரம் வந்தபோது, இயேசு தன் ஆத்துமாவில் கலங்கினார். அந்த வேளையில், தன்னை துன்பத்திலிருந்து தப்பித்துக் கொள்ள ஒத்தவேஷ வழி ஒன்றை நம் சற்குரு தேடினாரோ? அல்லது, “இத்துன்பம் அகற்றுக!” என்றுதான் ஜெபித்தாரோ? இல்லை! “இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன், பிதாவே இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ...... இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்! பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும்!! என்றே சொல்லுவேன்” (யோவான் 12:13-28) என்றல்லவா வெற்றி முழக்கமிட்டார்!

ஆம், தன் பிதாவின் நாமத்திற்கு எவ்விதத்திலும் களங்கம் உண்டாகிவிடக்கூடாது என்ற ஒரே உணர்வால் ஆட்கொள்ளப்பட்டு, சிலுவை சுமந்து முன்னேறிய நம் குருநாதர் அடிச்சுவடே நம் யாவரின் அடிச்சுவடாய் மாறுவதாக! சிலுவையின் வெற்றி நாதம், நம் தேசமெங்கும் அவரின் உத்தம சீஷர்கள் மூலமாய் முழங்குவதாக!! ஆமென்.

.

– ரத்னம்